# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1965/37 - 2016 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2016.05.06

*1965/37 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
155 ஒ உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்களை
கையளித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 155 ஒ உறுப்புரையின் நியதிகளின்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்.-

1. இதற்கான அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் வகைப்படுத்தல் தொடர்பாக அட்டவணை II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் அவர்களது ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அட்டவணை III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபருக்கும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் 155 ஒ உறுப்புரையின் பிரகாரம் அதிகாரங்கள் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

ஆயினும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயங்கள் தொடர்பாகவோ அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாகவோ ஏதேனும் வினாக்கள் எழும் சந்தர்ப்பங்களில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

இதற்கு மேலதிகமாக III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தரொருவர் I ஆம் நிரலில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தரொருவருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்கும் பட்சத்தில், தேசிய பொலிஸ் ஆணைக்குழு தம்மால் செய்யப்படவேண்டியுள்ள அதிகாரங்கள் எதனையும் கருத்திற்கொள்ளாது இங்கு அட்டவணை II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கல் அதிகாரங்களை அது தொடர்பாக ஒருவிதமான அதிகாரமும் கையளிக்கப்படவில்லை எனக் கருதி தொடர்ந்தும் செயல்படுத்தும்.

2. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பொலிஸ் மா அதிபருக்கு மற்றும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளுக்கும் இத்தால் கையளிக்கப்படுகின்ற அதிகாரங்களை செயல்படுத்தும் போது பொலிஸ் மா அதிபராலும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளினாலும் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எப்பொழுதும் அரசியலமைப்பின் 155 (எ) உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் உத்தியோகத்தர்களின் நியமனம் பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் தொடர்பாக விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் இந்த அணைக்குழுவினால் அவ்வப்போது தீர்மானிக்கும் விதிகள், கட்டளைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைய செயல்படுத்தப்படல் வேண்டுமென இங்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் விசேடமாக குறிப்பிடப்படுகின்றது.

3. எவ்வாறாயினும், (அரசியலமைப்பின் 155 (ஏ) உறுப்புரைக்கு அமைய) பொலிஸ் சேவைக்கு உரித்தான நடைமுறை விதிகளுக்கு ஊடாக கருதப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான விதிகள், கட்டளைகள் அல்லது நடைமுறை விதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் வரை அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் செயல்படுத்தப்படும் திகதிக்கு அமுலிலிருந்த பொலிஸ் சேவையுடன் தொடர்புடைய ஏனைய சகல விதிகள், கட்டளைகள் அல்லது நடைமுறை விதிகள் ஏற்றமாற்றங்களோடு ஆணைக்குழுவினால் சட்டமாக்கப்பட்ட அல்லது ஏற்பாடுகள் செய்யப்பட்ட விதிகள், கட்டளைகள் அல்லது நடைமுறை விதிகள் எனக் கருதி தொடர்ந்தும் செயல்படுத்த வேண்டும் என்பதோடு அவை பொலிஸ் சேவை தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும்.

4. அரசியலமைப்பின் 155 (ஏ) உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் குறிப்பிடப்படாதுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவ் ஆணைக்குழுவினால் நேரடியாக செயற்படுத்தக்கூடியனவாகும்.

இந்த அதிகாரக் கையளிப்பு 2015, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெற வேண்டுமென இத்தால் பணிக்கப்படுகின்றது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

பேராசிரியர் எஸ். ரீ. ஹெட்டிகே,
தவிசாளர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகம்,
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்,
9 ஆம் கட்டிடம்,
கொழும்பு 07,
2016, ஏப்பிறல் 07.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *நிரல் III*<br>*அதிகாரங்கள்*<br>*கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
|---|---|---|
| பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / சேவை பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைவாக பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ;<br>(ii) தகுதிகூர் நிலைக் காலப்பிரிவில் ஆவணப்படுத்தலை இரத்துச் செய்தல் அல்லது சேவையை நிறுத்துதல் ;<br>(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள இடமாற்றத் திட்டங்களுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் ;<br>(iv) ஒழுக்காற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் செய்தல் ;<br>(v) சேவையை இடைநிறுத்தம் செய்தல் ;<br>(vi) பதவி வெறிதாக்கல் தொடர்பாக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளை பரிசீலனை செய்தல் | பொலிஸ் மா அதிபர் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *நிரல் III*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
|---|---|---|
| பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளின் பொறுப் பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட் டுள்ள நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>(ii) ஒழுக்காற்று கட்டுப்பாடு ;<br>(iii) சேவை இடைநிறுத்தம் ;<br>(iv) பதவி வெறிதாக்கல் தொடர்பாக கிடைக்கப்பெறும் மேன்முறை யீடுகளை பரிசீலனை செய்தல் ; | பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் நிர்வாக அதி காரத்திற்குள் வரக்கூடிய ஏற்புடைய நிர்வாக அதிகாரப் பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர். |
| பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் | (i) தகுதிகூர்நிலை மற்றும் பதில் கடமை காலப்பிரிவின் பின்னர் பதவி நிரந்தமாக்கல் ;<br>(ii) பதவி விலகல் தொடர்பாக கிடைக்கப்பெறும் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் ; | பொலிஸ் மா அதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம்) |
| | (i) எவரேனுமொரு உத்தியோ கத்தர் அடுத்த நிலைக்கு தரத்துக்கு அல்லது பதவிக்கு பதவி உயர்த்தப்பட்ட பின்னர் ஒரு தடவைக்கு ஒரு வருடம் என்ற ரீதியில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாய பதில் கடமை சேவைக் காலத்தை நீடிப்புச் செய்தல்.<br>(ii) வினைத்திறன் காண்தடை தாண்டலில் சித்தியடையும் தேவைப்பாட்டை பூரணப் படுத்து வதற்காக ஒரு தட வைக்கு ஒரு வருடம் என்ற ரீதியில் ஆகக் குறைந்தது 3 வருடங்களாவது தகுதிகூர் நிலைக் காலப்பகுதியை நீடிப்புச் செய்தல் | பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (அவர்களது நிர்வாக அதிகார எல்லைக்குள்) |

*அட்டவணை (தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *நிரல் III*<br>*அதிகாரங்கள்*<br>*கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
|---|---|---|
| பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அந்தந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் நிர்வாக அதிகார எல்லைக்குள் இட மாற்றம் செய்தல் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) ;<br><br>(ii) பதவி நீக்கம் செய்தல் தவிர்ந்த அவர்களது நிர்வாக அதிகார எல்லைக்குள் ஒழுக்காற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ;<br><br>(iii) பதவி வெறிதாக்கல் தொடர்பாக முன் வைக்கப்படும் மேன் முறையீடுகளை பரிசீலனை செய்தல் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் |
| பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள தரங்கள் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரின் நிர்வாக எல்லைக்குள் வரக்கூடிய இடமாற்றங்கள், (பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | பிரதி பொலிஸ்மா அதிபர் |
| பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அந்தந்த நிர்வாக அதிகார எல்லைக்குள் வரக்கூடிய இடமாற்றங்கள். (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் II) (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் II) (பிராந்தியங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள பிரிவுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள்) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *நிரல் III*<br>*அதிகாரங்கள்*<br>*கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
|---|---|---|
| பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினர் | (i) அந்தந்த நிர்வாக எல்லைக்குள் பணித்தடை செய்தல் ;<br><br>(ii) ஏற்புடைய நிர்வாக எல்லைக்குள் ஒழுங்காற்று தண்டனைகளை விதித்தல்.<br>(பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரிகள் மற்றும் செயற் பாட்டி லுள்ள பிரிவுகளின் பொறுப்பதி காரிகள் தவிர்ந்த) | சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர், பிரதி பொலிஸ் மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் II) உதவி பொலிஸ் அத்தியட்சகர் |

5- 270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.